Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 225/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-3**

| Name | : | கௌரி | Husband Name | : | ஜெயராமன் |
|---|---|---|---|---|---|
| Village | : | தெற்குநாயகன்பேட்டை | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஐ தெரியும். சம்பவத்தின்போது 19.03.2025ம் தேதியன்று மதியம் 02.00 மணியளவில் சம்பவம் நடந்தது. எங்கள் வீட்டிற்கு எதிர் திசையில் பவுன்ராஜ், சித்ரா ஆகியோர் வீடு இருந்தது. அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 நிலத்தை அளவீடு செய்வதற்காக சித்ரா, பவுன்ராஜ் ஆகியோர் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 னிடம் தன்னுடைய இடத்தை அளந்து கல்லு போட நீ யார் பெரிய ஜட்ஜா என்று கூறி தகராறு செய்தார். அ.சா.1ன் சட்டையை பிடித்து மிரட்டினார். அவருடைய இருசக்கர வாகனத்தின் சாவியை எடுத்துக்கொண்டார். அ.சா.1 அதை தடுத்தபோது புண்டா மவனே இருடா உன்னை வச்சிகிறேன் என்று கூறி அ.சா.1 ஐ

சட்டையை பிடித்து சாவியை பிடிங்கியபோது அசா.1ன் கை விரலில் கீறல் ஏற்பட்டது. அவருடன் வந்த அ.சா.2 ஐ கீழே தள்ளிவிட்டார். இந்த சம்பவம் தெருவில் இருந்த அனைவருக்கும் தெரியும். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தெரு எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. சம்பவம் எங்கு நடந்தது என்றால் சித்ரா மற்றும் பவுன்ராஜ் ஆகியோர் வீட்டின் வாசலில் வைத்து நடந்தது. எனது வீடு எங்கு உள்ளது என்றால் எனது கொழுந்தனார் வீடு சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரே உள்ளது, நான் அவரது வீட்டிற்கு சம்பவம் நடைபெற்றபோது வந்திருந்தேன். சித்ரா மற்றும் பவுன்ராஜ் ஆகியோர் வீடு வடக்கு நோக்கியும் எனது கொழுந்தனாரின் வீடு தெற்கு நோக்கியும் அமைந்துள்ளது. ஆஜர்எதிரிக்கும் எனக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக சுமார் 10 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் எனது கொழுந்தனாரின் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சாப்பிட கை கழுவுவதற்காக வீட்டின் வெளியே வந்தேன், அப்போதுதான் சம்பவம் நடைபெற்றது. நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஆஜர்எதிரிக்கும் எனக்கும் இடையே இருந்துவரும் இடப்பிரச்சனை காரணமாக ஆஜர் எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் காரைக்குடியில் இருந்தேன் என்றாலும், அதனை மறைத்து வழக்கிற்காக சம்பவயிடத்தில் இருந்தேன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.09 19:06:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.